# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

( செய்தித்தாளாகப் பதிவுபெற்றது )


யாழ்நகர் மறைக்கல்வி நடுநிலையம், யாழ்ப்பாணம்.

**குருமாரின் மறைக்கல்விக் கருத்தரங்கு**

இம்மாதம் 29-ம், 30-ம் தேதிகளில் குருமாருக்கென ஒரு கருத்தரங்கு யாழ்ப்பாண மேற்றிராசன இல்லத்தில் நடாத்தப்படும். இவ்விரு நாட்களிலும் காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மட்டக்களப்பிலிருந்து வண. பிதா ரி. செல்வராஜ், எஸ். ஜே. அவர்களும், கொழும்பிலிருந்து வண. பிதா அலோசியஸ் றேபியல், ஒ. எம். ஐ. அவர்களும் கருத்தரங்கத்திற்குப் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜி. ரி. பாலசுந்தரம், ஒ. எம். ஐ.
மறைக்கல்விக் குழுத்தலைவர்.


95-ம் புத். | 1970-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 26-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 36-ம் இல.


# நாட்டில் ஒற்றுமை அவசியம்

## என்கிறார் ஆட்சிமன்ற சபாநாயகர்

சென்றவாரம் கொழும்பு சென் பெனடிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் தமது பள்ளிக்கூட, பழைய மாணவரில் இருவராகிய ஆட்சிமன்றச் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரட்ண அவர்களையும், நீதிமந்திரி எம். ஜயமான அவர்களையும் கௌரவிக்கும் நோக்கத்துடன் அளித்த விருந்துபசாரத்தின் போது, சபாநாயகர் திலகரட்ண பேசுகையில், நாட்டில் ஒற்றுமை நிலவவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். "நாம் பல இன பல சமயங்களைக் கொண்டுள்ள சமூகத்தினர் என்பதை மனதில் வைத்து, சென்ற காலங்களில் நிலைமை எவ்வாறு இருந்திருப்பினும், வருங்காலத்தில் ஒற்றுமையுள்ள சமூகமாக வாழ்வதை இலக்காகக்கொண்டு முன்னேற வேண்டும்" என்றார். நீதி மந்திரி: கத்தோலிக்க கல்லூரியாகிய சென்பெனடிக்ஸ் கல்லூரியும், மறு கத்தோலிக்க கல்லூரிகளும் இந்நாட்டுக்குச் செய்த சேவைகளுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம் என்று எடுத்துக்கூறித் தமது வாழ்வில் தாம் கண்ட முன்னேற்றம் முழுமையாகவே தமது பழைய கல்லூரிக்கே உரியது என்றார். விருந்துபசாரத்தில் கொழும்பு துணை ஆயர், ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளார், கல்விமந்திரி திரு. படுடீன் அவர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்,

# கேரள பிரிவில் உண்மை என்ன?

இந்தியதேசக் கேரள பிரிவிலிருந்து இந்தியப் பெண்கள் ஐரோப்பாவின் பல தேசங்களிலும் கன்னியாஸ்திரிமாராகுவதற்கு விற்கப்படுகிறார்கள் என்று எழுந்த கூக்குரலில் உள்ள உண்மையை ஆராய்வதற்குக் கேரள பிரிவிலுள்ள 16 மேற்றிராணிமார்களும் சென்ற வாரம் ஒன்றுகூடினர். இருநாட்களாக நடந்த கூட்டத்தின்பின் இரணகுள மேற்றிராணியாரின் காரியதரிசி பின்வரும் செய்தியை மேற்றிராணிமாரின் சார்பில் வெளியிட்டிருக்கிறார். "கன்னியாஸ்திரிமார் ஆகுவதற்கு இந்தியாவிலிருந்து பெண்கள் அனுப்பப்படுவது முற்றாக நிற்பாட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தகுந்த ஆராய்வின் பின்புதான் அங்கு செல்ல விரும்பும் பெண்கள் இனிமேல் அனுப்பப்படுவார்கள்" என்று அவரது அறிக்கை கூறுகின்றது. இந்திய அரசாங்கம் இவ்விஷயத்தை ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித்திருக்கின்றது. அவர்களது விசாரணை முடியுமளவும், வணக்கத்துக்குரிய சீறியக் பொத்தென்புரா சுவாமியார் இந்தியாவிலேயே இருக்கக் கட்டளைபண்ணப்பட்டிருக்கின்றார். பெண்களின் தேவ அழைத்தல் சம்பந்தமாகத் தொண்டு செய்த குருமாரில் வண. பொத்தென்புரா சுவாமி தலைமையானவர்.

## பத்திமா புனிததல வைத்திய தலைவர் காலமானார்

போர்த்துக்கால் தேசத்தில் உள்ள பத்திமாஷேத்திரத்தில் 1926ஆம் ஆண்டு தொடக்கமாக வைத்திய ஆராய்ச்சிக்குழுவின் அங்கத்தவராகவும், இறுதிக்காலத்தில் அதன் தலைவராகவும் கடமையாற்றிவந்த டக்டர் பெரெய்ரா கென்ஸ் என்னும் பெரியார் சென்ற வாரம் காலமானார். காலமாவதற்குமுன் சில காலங்களாக, பத்திமாவில் நடந்த புதுமையுள்ள வைத்திய சம்பவங்களைப்பற்றி ஒரு நூல் எழுதுவதில் அவர் ஈடுபட்டிருந்தார்.

## பாப்பரசரின் விண்ணப்பம்

பத்திரிகை அதிபர்கள் குழுவினர் தம்மைச் சென்ற வாரம் பேட்டி கண்டபோது பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் அவர்களுக்கு அளித்த உபதேசத்தில் கத்தோலிக்க பத்திரிகைகள் இன்றைய உலகிலே செய்துவரவேண்டிய வேலையைப்பற்றிச் சுருக்கமாக விளக்கியருளினார். உலகமானது மிகத்தீவிரமான மாற்றங்களைக் கண்டுவரும் இந்நாட்களில் நிகழும் சம்பவங்களை கிறிஸ்தவ முறையில் மக்கள் விளங்கிக்கொள்ள கத்தோலிக்க பத்திரிகைகள் மிக விழிப்பாக இருக்கவேண்டுமென்பதே பாப்பரசரது உபதேசத்தின் சாரமாகும்.

# இத்தாலிய திருச்சபையின் புத்துயிர் யூபிலி

இவ்வாண்டு, இத்தாலி தேசத்தில் ஒரு யூபிலி வைபவம் கொண்டாடப் படுகின்றது, 1870ஆம் ஆண்டு இத்தாலி தேசத்திலே பரிசுத்த பாப்பரசர் ஆண்டுவந்த பிரதேசங்களை இத்தாலிய மன்னன் தனதாட்சிக்குட்படுத்தியதும் பாப்பரசரின் பலம் உலகிலிருந்து முற்றாக அழிந்துபோகும் என எதிர்பார்த்தனர் பலர். ஆனால் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாக எவரும் நினைத்திராத முறைகளில் அது வளர்ந்துகொண்டே ஞான பலத்தில் அதிகரித்து வந்திருக்கின்றது. திருச்சபை இப்புத்துயிர் பெறுவதற்குக் காரணமாயிருந்த சம்பவங்கள் நடந்து இவ்வருடம் நூறுண்டுகள் நிறைவு பெறுகின்றன. ஆகவே, இத்தாலிதேச மேற்றிராணிமார்கள் இவ்வாண்டை ஒரு யூபிலி வருடமாகக் கொண்டு, திருச்சபையை என்றும் பரிபாலித்துவரும்தேவனை விசேஷ முறையில் புகழ்ந்து பாராட்ட இத்தாலிதேச மக்களைக் கேட்டிருக்கின்றனர்.

# அத்தியட்சகர் குலேந்திரன் அடிகளாருக்குப் பிரியாவிடை விழா

தென் இந்திய திருச்சபையின் பிரிவாகிய யாழ்ப்பாண மாவட்டத்தின் அத்தியட்சகராகச் சென்ற 23 வருடகாலமாக மிகத் திறமையுடன் கடமையாற்றிய டாக்டர் குலேந்திரன் அடிகளார் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற இருப்பதால் அவருடைய அரும்பெரும் சேவைக்கு நன்றி பாராட்டும் நோக்கத்துடன் சென்றவாரம் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒரு பிரியாவிடை வைபவம் நடைபெற்றது. அடிகளாரின் ஆளும் திறன், நூலாராய்ச்சி, சமயாராய்ச்சி, சிநேகமனப்பான்மை, பண்பு, ஆற்றல், நல்லொழுக்கம்முதலியன பலபேச்சாளரால் போற்றப்பட்டன. இவ்வைபவத்தில் பங்குபெற வட இலங்கையிலும், தென் இலங்கையிலுமுள்ள பல பெரியார் சமூகம் அளித்தனர்.

## கருதினால் குஷிங் ஓய்வு பெறுகிறார்

ஐக்கிய அமெரிக்காவிலும், அகில உலகிலுமே, வேத வைராக்கியத்துக்கும், திருச்சபையின் வளர்ச்சிக்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கும், பொஸ்ரன் மேற்றிராசன அதிமேற்றிராணியாராக 26 வருடகாலமாகக் கடமையாற்றிவரும் கருதினால் குஷிங் அடிகளார் பெயர்பெற்று விளங்கியவர். இவருக்கு இவ்வருடம் 75 வயது ஆகிறது. சென்றசில வருடங்களாக இவரது தேக சுகம் நல்நிலையில் இல்லாததனால் இவ்வருடம் 75 வருடம் நிறைவுற்றதும் அவர் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்குபரிசுத்த தந்தையின் அனுமதியையும் பெற்றுவிட்டார். இவரின் இடத்தில் பொஸ்ரன் மேற்றிராசன அதிமேற்றிராணியாராக அமெரிக்கதேச பிறவுண்பில் பிரதேச மேற்றிராணியாராகிய மொடல்றஸ் அடிகளார் நியமனஞ்செய்யப்பட்டிருக்கிறார்.

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்கள் அப்போஸ்தலர்களுடைய போதகத்திலும், அப்பத்தைப் பகிர்ந்து உண்பதிலும் செபத்திலும் நிலைத்திருந்தார்கள்

(அப். நடபடி 2-ம் அதி. 42-ம் வச).

மேலே கூறப்பட்ட சம்பவம், திருச்சபையின் ஆரம்பத்தில் அப்போஸ்தலர் தூயஆவியானவரைப் பெற்றபோது, அவர்களால் மனந்திரும்பிய புதுக்கிறீஸ்தவர்கள் இவ்வாறு அப்போஸ்தலர்களுடைய போதகத்தைக் கடைப்பிடித்து, தேவநற்கருணையை உட்கொண்டு செபத்தில் நிலைத்திருந்ததாக புனித லூக்காஸ் எழுதிய அப்போஸ்தலர் நடபடியில் எழுதியிருக்கிறார். அன்றியும், யோவேல், எசாயா தீர்க்கதரிசிகள் உரைத்தபடி, (அப். நடபடி. 2-ம்அதி. 18-ம்வச.) "மெய்யாகவே அந்நாட்களிலே என் அடியார் பேரிலும், அடியாள்கள் பேரிலும் என் பரி. ஆவியைப் பொழிவேன். அவர்களும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்" என்றும் எழுதியிருக்கிறார்.

அப்படியே இன்று, தூய ஆவியானவரால் ஏவப்பட்டு அழைக்கப்பட்ட கத். ஆசிரியைகள், தொண்ணூற்றெட்டுப்பேர் ஞானஒடுக்கத்தில் பங்குபற்றி, தங்கள் ஞானஒடுக்க குருவரின் போதகத்திலும், தேவநற்கருணை உட்கொள்வதிலும், செபத்திலும், தியானத்திலும் நிலைத்திருந்தனர் என்றால், உண்மையாகவே அது நம் பரலோக பிதாவின் அருட்கொடையென்றே எண்ணவேண்டும். விசேஷ அழைப்பென்றே உணரவேண்டும். ஆசிரியாது நல்நோக்கம் பூரணமடைய நற்சித்திபெற ஆங்கு இடவசதி, நீர்வசதி, உணவுவசதி, மற்றும் இடைவேளை வசதிகள் எல்லாம் சகோதர கன்னியரால் மிகச் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தன. எவ்வித வசதிக் குறைவும் அவர்கள் தியானத்தைக் குழப்பும் இடையூறாக அமையவில்லை. அங்கிருந்த புனிதமான கட்டிடங்களும், ஆகிய பூஞ்செடிகளும், வீசிய இளந்தென்றலும் ஆங்கு ஆராதனை செய்வதற்காய் அமைந்த கோயிலும், ஆசிரியைகளை ஆழ்ந்த பக்திப் பரவசத்தில் மூழ்கச் செய்தது என்றால், ஞானஒடுக்கத்தைப் பற்றிப் பேசவும் வேண்டுமா? இவ்வித ஞான ஒடுக்கத்தில் பங்குபற்றியவர் பேறுபெற்றோர் என்றே கூறவேண்டும். அத்துடன் காலத்துக்கும் தருணத்துக்கும் விஞ்ஞான ஏற்றத்துக்கும் ஏற்றவாறு, ஆசிரியைகள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள, ஞானப்போதகர் வேண்டிய உதவிகள் கொடுத்தார். அவர் தமது போதகத்தில், ஞானஸ்நானம் பெற்ற இறைமக்கள், உறுதிப்பூசுதல் வழியாய்ப் போர்வீரர் ஆகி, தேவநற்கருணையை உட்கொள்வதால் முதிர்ச்சியடைந்த அப்போஸ்தலராகி, சேவை செய்யும் குருவாகவும், இறைவாக்கினராகவும், நன்மைசெய்யும் அரசராகவும் தமதுபணியை புரியவேண்டும் என்று, மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு ஆசிரியையும் தம்மை, தமது ஆசிரிய சேவைக்கெனக் கையளித்து, தமமிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுருக்காக இறைவனுடன் பரிந்துபேசி, அவர்களது நல்வாழ்வில் அக்கறை எடுக்க வேணடும் என்றும், ஒவ்வோர் ஆசிரியரும் இறைவாக்கினராக, இறைவாக்கினரைப்போல் சீவித்து, இறைவனின் தகுதியான வார்த்தைகளை அறியவைப்போராகவும், பகிர்ந்தளிப்போராகவும் இருக்கவேணடும் என்றும் போதித்தார் அத்துடன் யேசுக்கிறீஸ்து அரசராய் இருப்பது போல, ஆசிரியரும் அரசராய் இருந்து, அடக்கியாளும் அரசராய் அல்ல, நன்மைகளைப் புரியும் அரசராய், நல்வழிகாட்டிப் பிழைகளைத் திருத்தும் அரசராய், நற்கதியைக் காண்பிக்க வேண்டும் என்றும் விளக்கினார். தொடர்ந்து மெய்விவாகத்தின் மேன்மை, பரிசுத்ததனம், மதிப்பு என்பவற்றையும், இன்று அவற்றின் மதிப்பைக் கெடுக்கும் ஏதுக்களையும், மிகத்தெளிவாக விளக்கி, பெண்களின் தற்கால முன்னேற்றத்தையும், அவர்கள், அரசியல் துறைகளில் மாத்திரம் அல்ல, ஞான விஷயத்திலும், முன்னின்று பணிபுரியும்படி வத்திக்கான் சங்கம், அவர்களுக்கு முழுஉரிமையும் மதிப்பும் கொடுத்து அழைக்கின்றது என்றும் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார். அத்துடண தேவநற்கருணை, குருத்துவம் ஆகிய, ஒன்றோடொன்று தொடர்புடைய, பிரிக்கமுடியாத, இரட்டைத் தேவதிரவிய அநுமானத்தின் மாட்சிமையை, உணரும்படி பல உதாரணங்கள்கூறி, இன்று இவை இரண்டையும்பற்றிய விசுவாசம், பலவிதத்திலும் தளப்பமடையப் பார்க்கிறது என்றும், இதைப்பற்றிய ஸ்திரமான காத்திரமான உண்மையை, ஆசிரியரே தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவரின் உள்ளங்களில் கட்டியெழுப்ப வேண்டும் என்றும், அதற்காக ஆசிரியரது செபதபம் மிகஅவசியம் என்றும் உணர வைத்தார். அன்றியும் தேவசினேகம், பிறர் சினேகம் என்பவற்றைப்பற்றி விளக்கியபோது, பூவுக்கு மணம் எவ்வளவு அவசியமோ, அதாவது மலரிடமிருந்து மணம் உண்டாவது போலவும், விண்மீனின் நின்று ஒளி உண்டாவது போலவும், கடலில் இருந்து அலை உண்டாவது போலவும், இறையன்பிலிருந்து பிறரன்பு உண்டாக வேண்டும் என்றும், பிறரன்பின் அவசியத்தை மிகத்தெளிவாக அறியவைத்தார்.

ஈற்றில் அவர் தம்மிடம் ஞான அறிவுபெற வந்துசேர்ந்த ஆசிரியைகளுக்கு எவ்வாறு பயிற்சியளித்தாரென்றால், யேசுநாதர் தமது போதனைக் கால மூன்று வருடத்திலும் தமது அப்போஸ்தலருடன், உண்டு, உறங்கி, உரையாடி அவர்களுடன் தங்கி அவர்களுக்குப் போதித்த மாதிரிகையையே பின்பற்றினார். அப்போஸ்தலிக்க ஆர்வத்தையும் ஏற்படுத்தினார். அத்துடன் இடைவேளைகளில் ஆராதனை வேளைகளில் பாடப்படும் பாடல்களையெல்லாம் மிகத் திறம்பட இன்னிசையாகப் பாடவும் பழக்கியது சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

உண்மையாகவே இம்மூன்று தினங்களிலும் ஆசிரியைகள் தமது கிறீஸ்துவ ஆசிரியக் கடமைகளை ஆழ்ந்து சிந்தித்ததுமன்றி, அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கான, ஞானோபதேச விரிவுரையாளர், பல திட்டங்களீட்டி, பேச்சாளர் பலரை வரவழைத்து, ஊட்டிய மேலதிகப் பயிற்சியும், ஆசிரியைகளின் ஞானத்தத்துவங்களை ஊக்கப்படுத்தியது. இவற்றையெல்லாம் மறந்து அயர்ந்து, போகவிடாது உயிர்ப்பிக்கவும், தொடர்ந்து நடப்பிக்கவும் அவர்கள் இடத்து ஏற்படுத்தப்பட்ட நிர்வாகக்குழு, மேலும் மேலும் கத்தோலிக்க ஆசிரியர்களைத் தட்டியெழுப்பி நேரிய பாதையில் நடத்தும் என்பது [illegible].

# ஏழைகளின் ஏழை யார்? ஏன்?

தமிழ்மொழியைத் திறன்படப்பேசவும், எழுதவும் கற்றுக்கொள்வதற்காகச்சென்ற விடுமுறையில் நான் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரிடம் தமிழ் பயின்றேன். அதுபோழ்து அவர் முதற்கண் உலகப் பொதுநூலாகக் கருதப்படும் திருக்குறளைப் பற்றிச் சிறிது ஆராயவேண்டுமென்று விரும்பி, அறத்துப்பாலைப்பற்றிப் பண்படப்போதித்தார். பற்பல இடங்களில் அவர் பல பதங்களுக்குப் புதுப்பொருள் பகரும்போது அவைகள் எனக்குப் புத்தொளியாகவும், புது அறிவாகவும் வெளியீடாகவும் விளங்கின. அவைகளில் ஒன்று "ஏழை" எனும் சொல்.

'ஒப்புரவறிதல்' என்ற அதிகாரத்தை ஆரம்பிக்குமுன் 'ஏழை' என்றசொல்லைப் பன்முறை பயன்படுத்தி அதன் உட்கருத்தை வெள்ளிடைமலைபோல் விளக்கினார். ஏழை என்றால், பொதுவாக மக்கள் கருதுவதுபோல் பொன்னும் பொருளும் சொத்தும் செல்வமும் இல்லாதவரைக் குறிப்பார்கள். அது இக்காலத்தில் வழங்கிவரும் பொருள். ஆனால் ஆனால் அதன் தொன்மைப் பொருள் அதுவன்று. அதன் உண்மைப் பொருளாவது, "ஒருவன் தான்விரும்புவது — வேண்டுவது — கைகூடாமல் இருக்கும்போது அதுகால் அவன் ஏழையாக இலங்குகின்றான்" என்று பொருள் பகர்ந்தார். அதனால் விழைவற்று, ஆசையற்று, விருப்பற்று இருப்பவனே செல்வன். மற்று எல்லோரும் ஏழைகள் எனப்படுவர். அப்படியென்றால் உலகில் வதியும் ஒவ்வொரு சீவனும், உயிரும், மாக்களும், மக்களும், பணம் படைத்தோரும், பரம ஏழைகளும், அறிஞர்களும், கல்வி அறிவில்லா பாமரரும், இல்லறத்தாரும், துறவறத்தாரும், இவைகளை எழுதும் நானும், வாசிக்கும் நீயும், நாம் அனைவரும் ஏழ்மையே உருவானவர்கள். ஏனெனில் உயிர்கள் அனைத்தும் ஏதாவதொரு விழைவையோ, ஆசையையோ, விருப்பையோ கொண்டுள்ளன. மாக்கள் மக்களாகவும், மக்கள்மாண்புற்று விண்ணகத்தில் வதியும் குடிமக்களாகவும் வாழ விரும்புகின்றனர். அதனால் ஒவ்வொருவனுடைய ஆசையும், அவாவும் முற்றுப்பெறும்வரை அவன் ஏழையாகவே இருக்கின்றான். அதனால் மற்றவன் பணக்காரன், செல்வன், அறிஞன் என்றெல்லாம் முறையிட்டு நலிவதற்குப் பதிலாக அவனும் வேறுவிதத்தில் வறிஞனாக இருக்கலாம் என்ற எண்ணத்துடன் தன்னம்பிக்கையுடன் தத்தம் விருப்புகளை நிறைவு செய்ய முயற்சி செய்வோம். ஆனால் ஏழைகளுக்கெல்லாம் ஏழை யார்? ஏன்?

—சகோ. மரியசெல்வம்—

இதே கருத்தைக் கடவுளுக்கும் குறிப்பிட்டு அவரும் ஓர் ஏழைஎன்றால் அது நெறிகடவாது என்று நான் நம்புகிறேன். ஏனெனில், இறைவன் அன்பின் தன்மை, "தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக" என்பது. அவ்வன்பின் இணையற்ற ஆற்றலால் தான் இவ்விரிவுலகமும், அதனுள் அனைத்தும், நீங்களும் நானும் படைக்கப்பட்டோம். அவ்வன்பின் ஆசை அதோடு வாளாவிருந்துவிடவில்லை. படைக்கப்பட்ட அனைத்தும் அவர் விரும்பிய விருப்பம் போல் இயைந்து வெற்றி காணும்வரை ஓயாது ஒழியாது விழைந்துகொண்டே இருக்கிறார்; இருப்பார்என்று நாம் நமது மட்டறிவினால் கொள்ளலாம்.

இதனாற்றான் வேதங்கள் அனைத்தும் இறைவனின் ஈடு இணையற்ற அன்புப் பெருக்கை அளப்பறிய மாட்டாதவைகளாய், இறைவன் ஏழைகளுக்கெல்லாம் ஏழையாக இலங்குகின்றானென இயம்புகின்றன. இதனாலல்லவோ பிரான்சிஸ் தாம்சன் என்ற ஆங்கிலக்கவிஞர் 'Hound of Heaven' "வேட்டை நாய்" என்ற உள்ளத்தை உருக்கும் ஆங்கிலக் காவியத்தை அமைத்துச் சென்றார். அக்காவியத்தில் நாம் காண்பதென்ன? இறைவனின் நித்திய சித்தத்தை, விருப்பத்தைக் காண்கிறோம். இறைவனின் நித்திய சித்தம் தம் சாயலாகச் சாற்றப்பட்ட மக்கள் தம்மோடு ஒருமித்து, தம்மையே ஒருங்காது உய்வதாம். இச்சித்தம், இவ்விருப்பம் கைகூடுவான் கருதி, இறைவன், மனிதன் நெறிபிறழ்ந்து நிரயத்தை நோக்கி விரைவதை ஒறுக்க மனிதனானார். மனிதனாகி முப்பத்துமூன்று வருடகாலம் வாழ்வழிக்கும் வழிவகைகளைப் போதித்து, போதித்தவைகளைச் சாதனையில் சாற்றி, கயவர்களின் வன்கண்மையால் மண்ணுக்கும், விண்ணுக்கும் இடையிலே கள்வர்களுக்கிடையிலே ஏழைகளுக்கெல்லாம் அன்பின் ஏழையாகச் சிலுவையென்னும் கழுமரத்திலே கொல்லப்பட்டார். உயிர்துறந்த மூன்றும் நாள் மரணத்தின்மேல் வெற்றிகொண்டு ஜெகசோதி வீரனாக விளங்குகின்றார். வீரனாக விளங்கியும் மன்பதை முழுதும் நிறைவுற்று மாண்புறும் வரை அவர் அவனியில் ஏழைகளுக்கெல்லாம் அன்பின் ஏழையாக, மறைபொருளாக நாடோறும் பீடத்தில் பலியாகி திவ்விய நற்கருணைப் பேழையில் அன்பின் கைதியாக வதிகின்றார். உலகம் முடியுமட்டும் வதிவார். "உலகம் முடியுமட்டும் நான் உங்களோடு இருப்பேன்." என்னே அன்பின் ஆற்றல். என்னே ஆண்டவனின் திருவிளையாடல்!

இறைவன் யேசு தம் அன்பை அனைவருக்கும் பொழிய விழையும் ஏழையாக இலங்குகின்றார். நாமோ அவர்தம் அன்பைப்பெற்று அழியா வாழ்வை விழையும் ஏழைகளாக இருக்கின்றோம்.

— நன்றி தோழன்

---

"சீவியத்தில் என்னை நேசித்த அன்பர்களே,
மரணத்தில் என்னை மறவாதீர்."

✠

### அலெக்சாண்டர் மரியான்தம்பி அவர்களின் 2-வது ஆண்டு நிறைவு தினம்

தோற்றம்: 29-8-1898    மறைவு: 27-9-1968

நிகழும் 29-ந்தேதி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திலும், பருத்தித்துறை, புனித தொம்மையப்பர் ஆலயத்திலும் துக்கப் பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர் மற்றும் நண்பர்கள் இவரின் ஆன்மசாந்திக்காக மன்றாடும்படி வினயமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், உற்றார், உறவினர்கள்.
கிழக்கு வீதி,
ஊர்காவற்றுறை.

---

❋ கிறீன்லாந்து! இத்தேசத்தில் சூரிய ஒளி மங்கலான பச்சை நிறமாகத் தெரிகிறது. எனவே (கிறீன்) green பச்சைலாந்து எனப் பெயர் வந்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்துவே உம்மை எப்படிக் காண்பேன்

"நீ சர்வேசுரனுடைய சுதன்பேரில் விசுவாசமாயிருக்கிருயோ?என்று அவனைக் கேட்க, அவன் பிரத்தியுத்தரமாக: அவர்பேரில் அடியேன் விசுவாசமாயிருக்கும்படி அவர் யார்? என்ருன். அதற்கு யேசுநாதர் நீ அவரைக் கண்டிருக்கிருய்; உன்னேடு பேசுகிறவரும் அவர்தாமே என்ருர். உடனே அவன்: ஆண்டவரே, விசுவசிக்கிறேன் என்று சொல்லித் தீர்க்கதண்டனுக விழுந்து அவரை ஆராதித்தான்" அவன் யார்? அவரால் அற்புதமாகக் கண்பார்வையடைந்த பிறவிக் குருடனுன சலோ.

அன்றுதினம் பகலவனின் பகலொளி பெற்றுப் பொலிவுற்று விளங்கியது, அகன்று விரிந்த நீலவானம். அதனைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது, பளிங்குபோலும் தெளிந்த நீரையுடைய "சீலோவே" எனும் தடாகம். அதிலே துள்ளியெழுந்து விளையாடின சிறிய கயல்மீன்கள். அப்பொழுது கதிரவனின் ஒளியிலே வைரமணிகளாகத் துலங்கின, அதிலிருந்து சிதறிய நீர்த்துளிகள்.

அத் தடாகத்தையே கண்ணிமைகொட்டாது கண்ணேக்கிய வண்ணமிருந்தான் சலோ. அப்பொழுது அவன் உள்ளத்தில் பெருகிய நன்றியறிவின் உணர்ச்சிப் பிரவாகம் கட்டுப்படாததுபோல், அவனுடைய கண்களிலிருந்து பெருகிய கண்ணீர்ப் பிரவாகமும் கட்டுப்படாது கரைபுரண்டோடியது.ஏன்? இரு தினங்களுக்குமுன் நிகழ்ந்த அந்த அதிசய சம்பவத்தலை—ஆம், அவன் தனது வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத அந்த அற்புத சம்பவத்தை அவனுடைய மனக்கண் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தியது அந்தத் தடாகம்.

இருதினங்களுக்குமுன் பல வருடகாலமாகச் சலோவின் இருதயத்தில் மகிழ்ச்சியில்லை. அவன் வதனத்தில் மலர்ச்சியில்லை; ஏனெனில், அவன் ஒரு பிறவிக் குருடன். அவனுடைய தோழன் சிமா பிறவியில் ஒரு முடவன். குருடனும், முடவனுமாகிய இருவரும் ஒருங்கே பிச்சையெடுத்துப் பிழைத்தனர். அவ்வாருக என்றுமில்லாத விதமாய் அன்று சலோமட்டும் தனிமையாகப் பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது சலோ, சலோவென்று யாரோ அழைக்கும் குரல், மகிழ்ச்சி கலந்த குரல்! ஒரு மனேகரமான குரல்கேட்ட திசையை நோக்கி அவனும் தனது முகத்தைத் திருப்பினுன். திரும்பவும் சலோ, சலோவென்று அழைத்துக்கொண்டு மகிழ்ச்சி பொங்கத் துள்ளிக் குதித்து நடந்துவந்து அவன்முன் நின்ருன் ஒருவன். அவன் வேறு யாருமல்ல. அவனுடைய யாசகத் தோழன் சிமாதான்.

சிமா பிறவியில் ஒரு முடவன்; ஆனுல், அன்று கிறிஸ்துநாதரால் குணமாக்கப்பட்டு, முடம்நீங்கிய ஒரு முழுமனிதன். தான் குணமடைந்து முடம் நீங்கியதையும், கிறிஸ்துநாதர் தன்னைப் புதுமையாகக் குணமாக்கியதையும், தன்னைக் குணமாக்கிய அந்தமகானையும் பற்றி அவசரம் அவசரமாகச் சலோவிடம் எடுத்துக் கூறிவிட்டுச் சற்றுமே தாமதியாது தன் பெற்ருேரைக் காணவென்று மின்னல்போல் ஓடி மறைந்தான் அவன்முன் நில்லாது சிமா.

— "ஞானம்" —

இதைக் கேட்டதும் சலோ சிம்மசொற்பனம் கண்டவன் போல் ஆச்சரியம் மேலிட்டவனுய் நெடுநேரம் தனக்குள்ளே சிந்தித்துவிட்டுச் சொல்லுவான்: "சிமாவைக் குணமாக்கி முடநீக்கிய கிறிஸ்து ஏன் என்னையும் குணமாக்க முடியாது? இந்த மனிதர் யாராய் இருப்பாரோ? சிலவேளை ஒரு தீர்க்கதரிசியாய் இருப்பாரோ? இப்போது அவர் எங்கே இருப்பாரோ? சிமா இதை எனக்குச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய் விட்டானே. இருக்கட்டும், எந்தவிதமும் நான் போய் அவரைக் காணவேண்டும், நான் தாமதித்தால் அதற்குள் இந்த ஊரைவிட்டு அவர் பயணம் போய் விட்டால் அப்போது என் செய்வது?" என்று அவன் மனம் அங்கலாய்த்து, கிறிஸ்துவே, உம்மை எப்படிக் காண்பேன்? குருடனுகிய என்மேலும் கருணைகொள்ள மாட்டீரோ? என்னையும் குணமாக்கி எனக்குக் கண்பார்வை அளிக்க மாட்டீரோ?"என்று வழி நீளம் உரத்துக் கூறியபடியே தனக்குமுன் நடந்துபோன சனக்கூட்டத்தைப் பின்தொடர்ந்து, தட்டித்தடவிக்கொண்டு ஆனமட்டும் தீவிரமாக நடந்தான், நடந்துகொண்டே போயினுன்.

அவ்வாது போகும்போது கும்பிடப்போன தெய்வம் எதிரேவந்து குறுக்கிட்டவாருய் அவரும் அவனை எதிர்கொண்டார். அவனுடைய அபயக்குரல் அவரின் திருச்செவிகளில் விழுந்தது. அவருடைய கருணை உள்ளம் இரங்கியது. அச்சணமே ஓர் அன்புக்கரம் தன்மேல் படுவதாக உணர்ந்தான்சலோ. உடனே அவரும் குனிந்து தரையிலே துப்பினுர். தமது உமிழ்நீரால் அதைச் சேருக்கினுர். அந்தச் சேற்றை அவன் கண்களில் தடவினுர். பின்னும் "நீ போய்ச் சீலோவே எனும் குளத்தில் கழுவு" என்று அதிகாரத் தொனியில் அவனிடம் கூறினுர். அவர் கூறியபடியே அவனும் போனுன். போய்க் கழுவினுன். கண்பார்வை அடைந்தான். அடைந்ததே தன்முன்பாகவுள்ள பரந்தநிலப் [illegible] அப்போதே முதல் [illegible]

[illegible]க் கண்டான். அத்தடாகத்தின் நீரில் தன் முகத்தை ஒருகால் பார்த்தபோது முகக் கண்ணுடியில்போன்று அவன் முகம் அதில் பிரதிபிம்பித்தது. அடங்கா மகிழ்ச்சிகொண்டவனுய் ஆனந்த நிர்த்தஞ் செய்தான். தனக்குப் புதுமையாகப் பார்வையருளிய கிறிஸ்துவைப் போற்றியது அவன் இதயம். நன்றியில் மிதந்தது அவன் உள்ளம்.

குருடன் சலோ இன்று பார்க்கிருன். அதைக் கண்ணுற்று வியந்தது உலகம். கிறிஸ்துவைப் புகழ்ந்தது நல்லவர் குழாம். அப்பொழுது அவனுடைய அயலகத்தாரும், அவனை முன்பின் அறிந்தவர்களும் இவன் உட்கார்ந்து பிச்சை வாங்கியவன் அல்லவா? என்க, சிலர் அவன்தான் என்றனர்; வேறுசிலர் அவனில்லை, ஆனுல், அவனுடைய சாயலாய் இருக்கிருன் என்றனர். அவனே, "நான்தான் அவன்" என்று அஞ்சாமல் கூறிநின்ருன். யேசு என்னப்படுகிற அந்த மனுஷன் சேறுண்டாக்கி என்கண்களிலே பூசி: "நீ போய்ச் சீலோவே குளத்தில் கழுவு"என்று சொன்னுர். நானும் போய்க் கழுவினேன், பார்வையடைந்தேன் என்ருன். இதை அறியவந்ததே கிறிஸ்துவைப் பகைத்தது பரிசேயரின் பொருமை நிறைந்த உள்ளம். அவன் சொல்லியதை அவர்கள் நம்பவில்லை. அவனே, அன்றுநான் குருடன். இன்று அவர் அருளால் நான் பார்க்கிறேன்எனப் பகர்ந்தான். அவர்கள் அவனுடைய தாய் தந்தையரை வரவழைத்து, உங்கள்மகன் இவன்தானு? இவன் குருடனுகப் பிறந்தவன்தானு? இப்பொழுது அவன் எப்படிப் பார்க்கிருன்? என்று வினவினர். அவர்களோ, இவன் எங்கள் மகன்தான்; குருடனுகவே பிறந்தான். இவனுக்குப் பிராயமுண்டு; இவனுடைய கண்களைத் திறந்தவன் யார்? என்று இவனையே கேளுங்கள் என்றனர். அவனிடம் மீண்டும் அதேவினு. அவனே மீண்டும் "நான் குருடனுயிருந்தேன்; இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றே எனக்குத் தெரியும்; ஆனுல், அவர் எவ்விடமிருந்து வந்தாரென்று அறியமாட்டோம் என்கிறீர்களே; பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவன் கண்களை ஒருவன் திறந்தானென்று உலகத்தின் ஆதிமுதற்கொண்டு கேள்விப்பட்டதில்லையே; அவர் சர்வேசுரனிடமிருந்து வாராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்ருன். இதைக்கேட்டதே பரிசேயரின்மனம் புழுங்கியது. கோபவெறியால் பொங்கியது. அவனைப் பழிவாங்கினுர்கள். வேதத்திற்குப் புறம்பே வெளியேற்றி விட்டார்கள்.

யேசுநாதர் இதைக் கேள்விப்பட்டார். இருதினங்களின் பின் தமதுசீஷர்களுடன் அவர் சென்றபோது வழியிலே அவனைக் கண்டார். அவனும் அவ[illegible]

[illegible]

தாட்படியிட்டு, அவரை வணங்கினுன். அப்பொழுது அவர், "நீ சர்வேசுரனுடைய சுதன் பேரில் விசுவாசமாய் இருக்கிருயோ? என்று அவனைக் கேட்க, அவன் பிரத்தியுத்தரமாக: ஆண்டவரே அவர்பேரில் அடியேன் விசுவாசமாயிருக்கும்படி அவர் யார் என்ருன். அதற்கு யேசுநாதர்: நீ அவரைக் கண்டிருக்கிருய்; உன்னேடு பேசுகிறவரும் அவர்தாமே என்ருர். உடனே அவன்: ஆண்டவரே, விசுவசிக்கிறேன் என்றுசொல்லித் தீர்க்கதண்டனுக விழுந்து அவரை ஆராதித்தான்." கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

# ஆண் பெண்ணை மதிக்க வேண்டுமா?

அன்றொருநாள் ஆறரை மணியளவில் ஆவரங்காலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸிலே நான் ஏறிக்கொண்டேன். அப்பொழுது ஒருசில இளம்பெண்கள் தங்கள் வேலை முடித்து வந்துவீட்டிற்குப் போவதற்காக நான் ஏறிய பஸ்ஸிலே ஏறிக்கொண்டனர். அவர்களில் ஓரிருவருக்குமட்டும் அமர இடம் கிடைத்தது. ஏனைய நான்குபேருக்கும் இடம் கிடைக்கவில்லை. நின்றுகொண்டிருந்த அவர்களில் ஒருவள் அங்கே அமர்ந்திருந்த ஆண்களைப் பார்த்துவிட்டுக் கோபத்துடன் பேச ஆரம்பித்தாள், நாங்கள் நின்றுகொண்டிருக்கிருேம்; இந்த ஆண்கள் எழுந்து எமக்கு இடந்தாவில்லை; ஆண் பெண்ணை மதித்தகாலம் மலையேறி விட்டது. முன்பெல்லாம் ஆண்கள் பெண்களைத் தெய்வத்திற் கடுத்தவர்கள்போல் மரியாதை காட்டினர். இப்பொழுது பெண்களை சந்தையிலே வாங்கும் சரக்கு என எண்ணி நடக்கின்றனர். இதுதான் இன்றைய இளைஞரின் நாகரீகம். இவ்வாறு கமலா அடுக்கிக்கொண்டே போனுள். அவளது அன்புத்தோழியர் தலையசைத்து ஆமா போட்டுக் கொண்டனர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த வாலிபரில் ஒருவன் (எனக்கு அறிமுகமான ஓர் கிறீஸ்தவப் பையன்; பெயர் அன்ரன்.) அண்ணுத்துரைபோல் அடுக்கு மொழியிலே அழகாகப் பேசத் தொடங்கினுன். ஆம் ஆண் பெண்ணை இன்று மதிப்பதில்லை; காரணம் அவளே தன் நடத்தையால் ஆண் மதிக்க முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டாள். அன்று வாழ்ந்த பெண்கள் கற்புநெறி தவருது அடக்க ஒடுக்கமாய் வாழ்ந்தனர். அவர்கள் மரியாதையாக வாழ்ந்ததினுல் ஆண்களும் அவர்களை மதித்து நடந்தனர். இன்று பெண்கள் ஆண்களைப்போல் உடுக்கின்றனர். அரைகுறையாக அவலட்சணமாகக் காட்சியளிக்கின்றனர். சிலசமயம் பசாசு பெண் உருவத்தில் உலகில் நடமாடுகிறதோ என எண்ண வேண்டியிருக்கிறது. ஆண்கள் தீயவழிநடந்து தமது இச்சைகளைக் கட்டுப்படுத்த முடியாதவாறு முட்டுக்கட்டையாகப் பாவச் சோதனையாக இருப்பவர்கள் பெண்கள். சினிமாச் சாலைகள், அலுவலகங்களில் மட்டுமல்ல, ஆண்டவன்வாழும் அன்பும் தூய்மையுமுள்ள ஆலயங்களில்கூடப் பெண்கள் அவமரியாதையாக, அரைகுறையாக ஆடையணிந்து வருகின்றனர். அதுமட்டுமா? இன்றைய நாகரீக வாலிபப் பெண்கள் இல்லத்திலே இருந்து தங்கள் இல்லக் கடமைகளைச் செய்ய விரும்புவதில்லை. மாருக வீதியெங்கும் அலைந்து திரிவதும், ஆண்களின் தொழில்களைத் தாம்செய்ய விழைவதும் இவ்வாருகக் காலத்தைக் கழிக்கின்றனர். இப்படிப்பட்டவர்களை ஆண்கள் எவ்வாறு மதித்து நடப்பர் என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்கட்டும். ஆண் ஆணுக வாழவேண்டும். பெண் பெண்ணுக வாழவேண்டும். இன்றுபெண் ஆணுகமாற முயற்சித்தால் ஆண் எப்படிப் பெண்ணை மதிக்கலாம்? இவ்வாறு அன்ரன் பேசிவிட்டு அமர்ந்தான், எங்கும் அமைதி நிலவியது. யாருமே பேசவில்லை. சற்றுநேரத்திற்குமுன் சீற்றத்துடன் பேசிய கமலா தன் தவறை உணர்ந்தவள் போல் தலையைக் கீழே போட்டபடி சோகத்துடன் காட்சியளித்தாள். ஒருசில பெண்களின் கண்கள் கலங்கியிருந்ததைப் பார்த்தேன். இந்தக் காட்சியைக்கண்டு கனவுலகில் இருந்த பிரயாணிகள் அனைவருக்கும் எழுந்திருங்கள், ஆவரங்கால் வந்துவிட்டதுஎன்று பஸ் சாரதி உரத்துக் கூறினுர். பஸ்ஸைவிட்டு வெளியே வந்ததும் "ஆம், பெண்கள் மரியாதையாக நடந்தால் ஆண்கள் அவர்களை மதிப்பர்" என்று அன்ரன் கூறிய அழகிய வார்த்தைகளை நான் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இல்லமேகினேன்.

சகோ. லூட்ஸ் அருள்,
F. M. M.

# 'ஞான ஒடுக்க இல்லம்' என்னும் 'ஏதேன் தோட்டம்'

பண்டத்தரிப்புக்கிராமத்தின் மத்தியில், பற்றிமாகோயிலின் அண்மையில் தபோவனமாக அமைந்திருக்கும் இந்த ஞான ஒடுக்க இல்லத்தை சீனுய் மலை என்போமா? யேசுநாதர் மறுரூபமான தபோர் மலை என்போமா? இல்லை தூய ஆவியானவரின் வருகைக்காக அப்போஸ்தலர் காத்திருந்து செபித்த அந்த மாடி வீடு என்றே கூறவேண்டும். இவ்விசித்திரமான வரங்களைப் பெற்றுத்தரும் இந்த ஞான ஒடுக்க நிலையம், சுற்றுமதில்களின் அரவணைப்பில், சகல வசதிகளும் அமைந்த வனப்பு வாய்ந்த கட்டிடங்களையும், ஞானிகளையும் மௌனிகளாக்கும் தேவாலயத்தையும், இடையிடையே அழகு நிறைந்த பல வர்ணப் பூஞ்செடிகளையும் தன்னிடத்தே கொண்டதாயும் யாவரையும் தியானம் செய்யும்படி தன்னிடத்தே இருகரம் விரித்து அழைக்கின்றது. அங்கு காணப்பட்ட புனிதம், இறைவனின் பரிசுத்த தனத்தை மாத்திரமல்ல, இறைவனுக்குத் தம்மை கையளித்தோரின் உள்ளத் தூய்மையையும் வாய்விட்டுக் கூறிக் கொண்டேயிருக்கின்றது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருமைச் சகோதரங்களே,

அடுத்துவரும் ஐப்பசிமாதம் செபமாலை வணக்கமாதம் என்பது நீங்கள் யாவரும் அறிந்ததே. இந்த மாதத்தில் நாடோறும் செபமாலை செபிக்கும்படி நம் அன்னையாம் திருச்சபை நம்மை ஏவித் தூண்டுகிறது.

செபமாலைப் பக்தி எமது ஆத்தும இரட்சணியத்துக்கு மிகவும் உபயோகமான ஒரு பக்தி. செபமாலை செபிக்கும் பொழுது ஒவ்வொரு காரணிக்கத்திலும் யேசுநாதருடைய சீவியத்தினதும், மரணத்தினதும் ஒரு பகுதியைத் தியானிக்கிறோம். அவைகளைத் தியானித்து, யேசுநாதர் அனுசரித்த புண்ணியங்கள் எவையென்று உணர்ந்து அவைகளை எங்கள் சீவியத்திலும் அனுசரிக்கப் பிரயாசப்படவேண்டும்.

நாம் எல்லோரும் தினந்தோறும் செபமாலைப்பக்தியை அனுசரித்துவர வேண்டுமென்று தேவதாயார் வற்புறுத்திக் கேட்டிருக்கிறா. இது உலகத்தவர் செய்துவரும் அநியாய அக்கிரமங்களுக்குப் பிராயச்சித்தஞ் செய்வதாலே நீதிப் பிரகாரம் உலகத்துக்குத் தண்டனை வராமல் தேவகரத்தைத் தடுப்பதற்கு ஏதுவாகும்.

ஆகையால் சிறுவர்களே! தேவதாயாரை மன்றாடி, அவ கேட்டுக்கொண்டபடி நாள்தோறும் செபமாலை செபியுங்கள். விசேஷமாய் இந்த மாதத்தில் திவ்வியநற்கருணை நாதருக்கு முன்பாகவிருந்து செபமாலை வணக்கமாதத்தை அனுசரியுங்கள். உங்கள் வீடுகளிலும் செபமாலைப்பக்தியை வளர்த்து வாருங்கள்.

நீங்கள் செபமாலையைச் செபிக்கும்பொழுது உலக சமாதானத்துக்காகவும், பரிசுத்தபிதாவின் கருத்துக்கள் நிறைவேறவும், கிறீஸ்தவ குடும்பங்களில் செபமாலைப் பக்தி வளர்ந்தோங்குவதால் அவைகள் ஒற்றுமையாயும் சமாதானமாயும் நிலைபெற்றுவாழவும், உங்களைப்போன்ற சிறுவர்களுக்குக் கத்தோலிக்க கல்விக்களஞ்சியம் கிடைக்கவும், எமது தாய்நாட்டின் சுபீட்சத்துக்காகவும் மன்றாடுங்கள்.

— அண்ணு

# நான் கண்ட கனவு

அன்று படுக்கையில் படுத்திருந்தேன். கூட்டைவிட்டுப் பறந்துபோன எங்கள் கிளியின் ஞாபகம் வந்தது. பால் கொடுத்தோம்; பழம் கொடுத்தோம். ஆனாலும், இந்தக் கிளி எங்களை மறந்து போய்விட்டது. பட்டினி கிடந்து இறந்துபோக நேரிட்டாலும், சுதந்திரமாய் வாழ்வதே மேல் என்று அந்தக் கிளி நினைத்திருக்க வேண்டும்.

கிளியின் நினைவில் என் கண்கள் மயங்கவே, தூக்கம் என்னை அணைத்துக் கொண்டது.

கிளியைத் தேடிப் புறப்பட்டேன். நீண்ட பூமரச் சோலைகளின் இடையே என் கால்கள் நடந்து போயின. கண்கள் மரங்களின் உச்சியில் நடனமாடும் பறவைகளைப் பார்த்துச் சென்றன. காதுகள் அந்தப் பறவைகளின் இனிய கீதத்தில் அமிழ்ந்தி இருந்தன.

"ஏ பெண்ணே! அங்கே நில்" என்று ஓர் குரல் கேட்டுத் திடுக்குற்று நின்றேன். "யாரும் அடைய முடியாத என் தவச் சோலையில் வந்த பெண் நீ யார்?" என்றார் ஒரு முனிவர். "ஐயா, முனிவேந்தே! என் கிளியைத் தேடி வந்தேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று முனிவரைப் பார்த்து மன்றாடினேன்.

"பெண்ணே! நீ எதைத் தேடிப் புறப்பட்டாயோ அதைப்போல் நீ ஒரு கிளி ஆகக்கடவாய்" என்று சபித்து மறைந்தார் அவர். நான் கிளியானேன். நான் கவலைப்படவில்லை. சோலையின் மேலே சந்தோஷத்தோடு தாவிப் பறந்தேன். ஆகா! நீண்ட வானத்தில் பூமிக்கு மேலே பறப்பதில் எவ்வளவில் ஆனந்தம் இருக்கிறது? பறந்து பறந்து சென்றேன். மரங்கள், செடிகள், மாடமாளிகைகள், ஆறுகள், நீர்அருவிகள் எல்லாவற்றிற்கும் மேலாகப் பறந்து சென்றேன்.

கடைசியாக இமாலய மலையின் உச்சியைப் போய்ச் சேர்ந்தேன். எவறெஸ்ற் சிகரத்தில் நின்று உலகைப் பார்த்தேன். ஆகா! மோட்சம் அங்கேதான் இருந்தது. வெள்ளியை உருக்கினாற் போல் மலையின் உச்சி வெண்பனியால் நிறைந்து இருந்தது. தொலையில் தெரிந்த வெண்பனி மலைச்சிகரங்கள் தேவ கன்னிகைகளைப் போல நின்றன. மேகங்கள் நான் நின்ற சிகரத்தைத் தொட முடியாமல் ஆயிரக்கணக்கான அடி கீழே பதிந்து [illegible] மூடியிருந்தன. அண்[illegible] பார்த்தேன். தெளிந்த தூய நீலவானம் என்னை மறக்கச் செய்தது.

அப்போது "ஹில்லறி" அந்தக் கிளியைப் பார். எங்களுக்கு முன்னேயே இந்தக் கிளி எவறெஸ்றுக்கு வந்துவிட்டது. நாங்கள் தான் எவறெஸ்ரை முதன்முதல் அடைந்தோம் என்ற சத்தம் கேட்டது. கீழே பார்த்தேன். எவறெஸ்ரின் உச்சி[illegible] பேரதுதான் கண்டேன். திடீர் எனப் பனிக்கல்லு ஒன்று என்மேல் பட்டது. பெற்றம்மா! பெற்றம்மா! என்று சப்தமிட்டுப் புலம்பிக் கொண்டே எவறெஸ்ற் சிகரத்தில் கீழே உருண்டு உருண்டு வீழ்ந்தேன். படுக்கையில் இருந்து கீழே விழுந்த என்னை அம்மா தூக்கிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் நான் கனவு உலகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்திருக்கிறேன் எனக் கண்டேன்.

"பொன்"

# இருளில் இருந்தவள் ஒளியைக் கண்டாள்

அந்தப்பெண் பத்தொன்பது வயதில் கத்தோலிக்க சமயம் உண்மையென அறிந்து, ஞானஸ்நானம் பெற்று கிறீஸ்துவின் மந்தையில் சேர்ந்து கொண்டாள். மிகவும் பயபக்தியாகத் தேவநற்கருணை பெற்று உருக்கமாக மன்றாடினாள். கத்தோலிக்கருடன் சேர்ந்து செபங்கள் சொல்லவும் திருநாள் பெருநாள் கொண்டாடவும்பழகிக்கொண்டாள், விசேஷமாய் யேசுவின் திருஇருதயப் பக்தியே அவளிடம் காணப்பட்டது. என்ன இருந்தும் அவளிடம் ஒருசிறுகுறை இருக்கத்தான் செய்தது. பாதிரி சமயத்திலிருந்து மனம் திரும்பிய படியால் அவளது இதயத்தில் தேவ அன்னைக்கு இடம்இருக்கவில்லை. ஆயின் அவளது நல்மனம் தேவ அன்னையை வெறுக்கவில்லை. செபமாலை சொல்வதென்றால் அவளுக்கு ஒரே அலுப்பு. தெண்டித்து அதிக கஷ்டத்துடன் ஒரு காரணிக்கம் சொல்லுவாள். இப்படியே காலம் உருண்டோடியது. வருத்தம், கஷ்டம், நஷ்டம் வந்தபோது மாத்திரம் தேவதாயிடம் வேண்டிக் கொள்வாள். அத்தாயுள்ளம் படைத்த அன்னையும் அவளை அற்புதமாய் வழிநடத்திவந்தாள். ஆயின் அவளது அசட்டைத்தனத்தைத் திருத்தத் தேவனும் தருணம் பார்த்திருந்தார்.

அவளுடைய மகன் ஓர் உத்தியோகத்துக்குத் தேவையான பரீட்சையில் விசேஷ திறமைகளுடன் சித்தியடைந்திருந்தும், அவ்வுத்தியோகத்துக்கு வேண்டிய பயிற்சிகள் பெற்றிருந்தும், அவனின் பயிற்சிக்கேற்ற வேலைகிடையாமல் கஷ்டப்பட்டான். உத்தியோக பஞ்சமான இந்நாட்களில் வேறு வேலையாவது எடுக்கலாம் என்று ஆயத்தங்கள் செய்தபோதும், எவ்வளவோ இலகுவாகக் கிடைக்கக்கூடிய வேலைகள்தன்னும் அவனை எட்டிப்பார்க்க மாட்டேன் என்றுவிட்டன. நாற்பத்துமூவரில் முதல்வனாய்ச் சித்தியடைந்த இவனுக்கு நியமித்திருந்த வேலை முகமன் காரணமாய் வேறொருவனுக்குக் கிடைத்தது. இதன் காரணமாய்த் தாய் அங்கலாய்த்தாள். புத்தகத் தட்டில் இருந்த "மரியாயின் அற்புதச்சரிதை" என்ற புத்தகம் அவள்கைக் கெட்டியது. ஆவலுடன் வாசித்தாள். அப்பரிசுத்த அன்னையின் சரிதையை வாசித்ததும் அவளின் அறிவை மறைத்திருந்த இருள் அகன்றது. ஒளி பிரகாசித்தது. அதே நாட்களில் தேவ அன்னையைப்பற்றிய பிரசங்கம்கேட்கக்கூடிய வசதிஒன்றும் காத்திராப்பிரகாரம் அவளுக்குக் கிட்டியது. என்ன அதிசயம்! அந்நேரமே தேவநற்கருணையின்முன் தேவதாய் மட்டில் அசட்டைத்தனமாய் நடந்ததை உணர்ந்தாள். மரியிடம் பணிவுடன் மன்னிப்புக் கேட்டாள். இனிமேல் அன்னையின் அருளை மறப்பதில்லையென்றும், செபமாலையைப் பத்தியாய் ஓதிவருவேன் என்றும் பிரதிக்கினை பண்ணினாள். அதன்பின் தன்மகனை நினைவுகூரும்படி மன்றாடினாள். என்ன அதிசயம்! அந்தக் கிழமையே மகனுக்கு ஒரு வேலைக்கு அழைப்புக்கடிதம் வந்தது. அடுத்தமாதம் வேலையும் கிடைத்தது. உடனே தாயும் மகனுமாகத் தேவனுக்குத் தோத்திரப்பலியும், மரியன்னைக்கு சொல்லமுடியாத நன்றி வாழ்த்தும் சமர்ப்பித்தனர். மரியாயே! நீர் வரப்பிரசாதத்தின் வற்றாத ஊற்று.

நம் இரட்சணிய அலுவலில் தேவஅன்னை எவ்விடத்தில் நிற்கிறாள்என்பதை அவதானிப்போம். அன்பின் இரட்சகருக்கு 14 வருடங்களுக்குமுன் இப்பூமியில்பிறந்து, தன்னைப் பரமபிதாவின்முன் அடிமையாக ஒப்படைத்துத்தேவசுதனின் பிறப்புக்குச் சித்தமானா. முப்பது வருடமாகத் தாம் பரிசுத்த அன்னையென்பதையும் தமது உதரக்கனி சர்வவல்லமையுள்ள தேவன் என்பதையும் இரகசியமாகக் காப்பாற்றி கானாவூர்க் கலியாணத்தில் நேரம் கிட்டியபோது, யேசுநாதரைத் தாமேஏவி முதல் புதுமையைச் செய்வித்தா. தன்னிடம் தேவன் ஒப்படைத்த பலிப்பொருளாகிய சுதனைப் பக்குவமாக வளர்த்து, யேசுநாதர் சுமந்த சிலுவையைத் தாமும் இதயத்தில் சுமந்து கல்வாரிமலையில் சிலுவைப்பலியைப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்த பெருமையை எப்படி வர்ணிக்கலாம். சிலுவைப் பலியை யேசுநாதருடன் சேர்ந்து பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்த முதற்குரு மரியன்னையே! மகன் உயிர்நீத்ததும் மனம் களைத்து வீட்டுக்குச் சென்று அழுதாற்றி இருந்துவிட்டாவா? இல்லையே. அப்போஸ்தலருடன் காத்திருந்து, அவரின் உயிர்த்தெழுதலைக் கண்டு ஆனந்தித்து தோத்திரம் சொன்னா. இன்னும் ஒன்பது நாட்களாய் அப்போஸ்தலருடன் காத்திருந்து செபித்து, பத்தாம்நாள் பரிசுத்தஆவியானவரைப் பெற்று, திருச்சபையை ஆரம்பித்து வைத்தவவும் நம்பரிசுத்த அன்னையே. அவ அன்றும், இன்றும், என்றும் நமக்கும் திருச்சபைக்கும் தாய். அருள்நிறை அன்னையே வாழ்க!

## செபமாலை

—[ யாழ். ஜெயம் ]—

1

புண்ணியந் தந்திடும் பூமாலை—உயர்
பொன்னுல காளின் புகழ்மாலை
எண்ணரும் நன்மை அருள்மாலை—புவி
ஈடேற வந்த செபமாலை.

2

மண்ணுல காளும் தனிமாலை—தேவ
மாமரி யாளின் மணிமாலை
விண்ணுல கேற்றும் மொழிமாலை—துயர்
வேதனை போக்குஞ் செபமாலை.

3

பாவியைக் காத்திடும் பொன்மாலை—தேவ
பக்தியைக் கூட்டும் நன்மாலை
சாவிலு மேதுணை யாம்மாலை—நிறை
சாந்தி யளிக்குஞ் செபமாலை.

4

தேடக் கிட்டாத திருமாலை—பெருந்
தீமைகள் நீக்கும் தபமாலை
ஈடிணை யின்றித் திகழ்மாலை—எங்கள்
ஈஸ்வரி தந்த செபமாலை.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு காணப்பட்ட அமைதி, மக்களை இறைவனுடன் உரையாடும்படி தூண்டியது. அங்கு அமைந்துள்ள ஒவ்வொரு வசதியும், ஆதாம் ஏவாள் படைக்கப்பட்டபோது, ஏதேன் தோட்டம் இருந்த நிறைவைக் காட்டுகிறது. இந்நிலையம் ஏறக்குறைய நூறு பேரைத் தன்னகத்தே அடக்கிப் போஷிக்கக் கூடிய தகமைவாய்ந்தது. நல்லஞானத்தியாகங்கள்நடத்தவிரும்புவோருக்கு ஓர் உசித புரமாயுளது.

கண்டு களித்தோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை-மூதூர் மறைமாநில கத். ஆசிரியர் சங்கம்

திருகோணமலைப் பிராந்திய கத்தோலிக்க ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 15-9-70 அன்று திருகோணமலை புனித சூசையப்பர் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் திருமலை மட்டக்களப்பு துணைஆயர் அதிவந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

துணைஆயர் அவர்கள் தமது தொடக்க உரையிலே, இன்று அரசாங்கப் பாடசாலைகளிலே மறைக்கல்வியின் நிலைமை மோசமான நிலைமையிலிருப்பதையும், அத்தகைய நிலைமையை அகற்றி மறைக்கல்விப் போதனையின் தரத்தை உயர்த்த ஆசிரியப் பெருமக்களாற்றான் முடியுமென்றும் அதற்கான வழிவகைகளை அவர்களே ஆராய்தல் வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இதன்பின் தலைவர் ரேச் தேவாஸ் அவர்கள் அவையோரை வரவேற்று உரைநிகழ்த்தினார்.

அடுத்து அருட்திரு அரசரெத்தினம் அடிகளார் சங்கம் இயங்க வேண்டிய அவசியத்தை மேலும் வலியுறுத்தி அதற்கான ஆலோசனைகள் சிலவற்றையும் கூறினார்.

கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது அருட்திரு ஹென்றி பொன்னையா அடிகளார் அவர்களின் கருத்துரை. ஞானோபதேசக் கல்வி இன்று உலகநாடுகளிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும் பிறநாட்டவர் கையாளும் புது முறைகளைக் கையாண்டால் சிறந்த முறையில் போதிக்கலாம் என்றும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் மறைக்கல்விப் போதனையிலே உளநூலின் அவசியத்தையும் எவ்வாறு ஐந்து அல்லது ஆறு வயதுக் குழந்தையின் மனதிலே அதன் எதிர்காலப் பண்புகள் பதியப்பட்டு விடுகின்றனவென்றும் விளக்கினார். ஆகவே, குடும்பம் இம்மறைக்கல்விப் போதனையிலே நடுநாயகமாக விளங்க வேண்டும் என்றும் கூறினார். வயது வந்தோருக்கான மறைக்கல்விப் போதனையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பின்வருவோர் சங்கத்தின் உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர்

புரவலர் :

**மகாவந். திருமலை மட்டக்களப்பு மேற்றிராணி ஆண்டகை.**

ஞானத்தலைவர் :

**அருட்திரு ஹென்றி பொன்னையா அடிகளார்.**

தலைவர் :

**திரு. N. கணபதிப்பிள்ளை**

உபதலைவர்கள் :

**பண்டிதர் பீ. எம். குருஸ்**
**திருமதி எஸ். யோசப்.**

செயலாளர் :

**அருட்திரு எஸ். ஏ. ஐ. மெத்தியு, S. S. J.**

உபசெயலாளர் :

**திரு. எஸ். எம். தேவதாசன்**

பொருளாளர் :

**தவத்திரு சகோதரி. M. வில்லியோசா, A. C.**

செயற்குழு உறுப்பினர் :

**திரு. சந்தியாப்பிள்ளை— மூதூர்.**
**திரு. யோ. மரியதாஸ்— பெரியகடை.**
**திரு. யோசப்—நிலாவெளி.**
**திருமதி M. அல்போன்ஸ் மேரி—சின்னக்கடை.**
**செல்வி கிறிஸ்சோஸ்தம்— பாலையூற்று,**

இதன் பின்பு நடைபெற்ற கலந்துரையாடலிலே சங்கத்தின் அங்கத்தவர்கள் வருடம் ரூபா 3-00 சந்தாப்பணம் செலுத்த வேண்டுமென ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிராந்திய செயலாளர் ஜே. எஸ். செபமாலை அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவெய்தியது.

எஸ். ஏ. ஐ. மெத்தியு, S. S. J.
செயலாளர்.

---

✠

**சிமியோன் பிலிப்**
**(சம்மாட்டியார்)**
அவர்கள் மறைவின்

## 3-வது வருட நினைவு

தோற்றம் : 28-2-30. மறைவு : 26-9-67.

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும், எங்கள் மனதில் நின்றும் நீங்காத சிமியோன் பிலிப் அவர்கள் மறைந்த 3-வது ஆண்டு இம்மாதம் 26-9-70 இல் நிறைவுறுவதால் அன்று காலை 5-30 மணிக்கு புனித யாகப்பர் தேவாலயத்தில் துக்கப்பாடற் பூசை நடைபெறும். இதனைக் கண்ணுறும் இனசனர், அனுதாபிகள் அவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய் கேட்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், பெற்றோர், சகோதர சகோதரிகள்.

றெக்கிளமேசன்,
குருநகர், யாழ்ப்பாணம்.

---

### நேர்த்தியின் பூர்த்தி

எங்கள் அருமைத் தாயாருக்கு நெடுங்காலமாய் இருந்த நோயானது புனித யூதாததேயுவின் அருளாற் குணமாயிற்று. இப் புனிதரின் நாமம் என்றென்றும் வாழ்த்தப்படுவதாக.

எஸ். எம். ஏ.
சூராவத்தை, 122|70

---

# கீரிமலைச் சுரங்கத்தில் ஒருமணி நேரம்

கீரிமலைப் பகுதியில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட சுரங்கப்பாதையில் ஒரு மணி நேரம் தங்கிப் பார்வையிட வசதிகிடைத்தது. நேயர்கள் பலருக்கும் இதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காவிடினும் எனது அனுபவங்களேயும், கண்ட காட்சிகளையும் எடுத்துக்கூறுவது மிகப்பொருத்தமாயிருக்குமென எண்ணுகிறேன்.

நண்பர்கள் ஐவருடன் மேற்படி சுரங்கப்பாதையிருக்கும் கீரிமலையை அடைந்தேன். சுரங்க வாயிலைக் கண்டதும் இது பெரிய சுரங்கம் இதற்குள் என்னதான் இருக்கப் போகிறது என்று என்னையே ஒருமுறை கேட்டுக் கொண்டேன். இருந்தும் உட்செல்லப் பயந்து நின்றவர்களை ஒருவாறு தள்ளிக்கொண்டு உட்சென்றோம். எமக்கு முன்பும் பலர் சென்றிருப்பது அங்கு கட்டப்பட்டிருக்கும் நூல்களிலிருந்தும் வெளியே நின்ற துவிச்சக்கரவண்டிகளின் தொகையிலுமிருந்தும் அறிந்து கொணடேன். நண்பர்களோ 'டோச்' வெளிச்சங்களுடன் தயாராய் நின்றனர். உடைகளுடன் செல்வது கஷ்டமாயிருந்தபடியால் உடைகளை முதலிலே மாற்றிக் கொண்டோம். எமது பிரயாணத்தை ஆரம்பித்தோம். எமக்குப் பின்னால்வந்த இளைஞர் குழுவினர் கையிலே எரியும் மெழுகுவர்த்திகளைப் பிடித்துக்கொண்டே எம் பின்னே வந்துகொண்டிருந்தனர். மிகுந்த கவனத்துடன் கட்டப்பட்டிருந்த நூலின் உதவியோடு சென்று கொண்டிருந்தோம். ஒருவர்பின் ஒருவராய் குனிந்தவண்ணம் கற்பார்களில் மோதாது சென்று கொண்டிருந்த போதிலும் டோச்லைற் மெழுகுவர்த்தி என்பன கொடுத்த ஒளி போதியதாய் இருக்கவில்லை. ராசா......வாறேன்....நாயகம்....வாறேன். மிகுந்த சிரமத்துடன் முன் சென்றுகொண்டிருந்த நண்பர்கள் ஒருவர் ஒருவரை சப்தமிட்டு அழைத்துக்கொண்டே சென்றனர்.

அடிக்கடி நூலையும் தொட்டுக்கொண்டே சென்றோம். தேகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. வியர்வை துளித்துளியாய் வழிந்து கொண்டிருந்தது. கால்கள் புதைய ஆரம்பித்தன. கடும் சேற்றில் சில இடங்களில் கால்களை இழுத்தெடுப்பதும் சிரமமாயிருந்தது. அதிகமான இடங்களில் படுகுழிகளும் காணப்பட்டன. சிறிது அசட்டைத் தனமாயிருந்தால் குழிகளிலும் விழவேண்டியிருந்திருக்கும். கைகள் கால்கள் எல்லாம் சேறும் சகதியும். அப்புறம் காலடி எடுத்து வைக்கக்கூடாத நிலைமையும் கூட. துணிந்துநின்ற நண்பர்கள் மனம் சோர்ந்துவிட்டனர். நூலில் பிடித்தபடி வந்து வாயிலை அடைந்தோம்.

நாம் முதலில் சென்றது வடக்கு நோக்கிச் செல்லும் பாதை. தெற்கே செல்லும் பாதையில் நீர் நிறைந்த குளம் போன்ற பகுதியிருப்பதாக அறியவந்தோம். மீண்டும் நண்பர்கள் அதனைப் பார்வையிட வேண்டும் என அடம் பிடித்தனர். சரி இச்சந்தர்ப்பம் எப்போ கிடைக்கப் போகிறது. புறப்படுங்கள் என்றேன். அதிகதூரம் செல்லவில்லை முன்புபோல் வாயிலில் இருந்து சில அடி தூரத்தில் இப்பகுதி காணப்பட்டது. சிறிதுசெல்லச்செல்ல நீரின் ஆழம் அதிகரித்தது. அப்பால் நீர் அதிக ஆழம் செல்ல வேண்டாமெனத் தடுத்தனர் அங்கிருந்த பலர். கைகால்களை அலம்பிக் கொண்டு பெரியதொருசாதனையை நிலைநாட்டிய பெருமையோடு வெளியே வந்தோம். திரளான மக்கள் கூடியிருந்தது எம்மை வரவேற்க என்பது போலிருந்தது.

— திராட்சையூரான்

---

✠

**அந்தோனி இம்மனுவேல்**
**பேர்ணண்டோவின்**

## 5-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம் : 29–11–1902 மறைவு : 1–10–1965

இவரின் ஆன்மசாந்திக்காக மன்னார், புனித செபஸ்தியார் ஆலயத்தில் எதிர்வரும் ஐப்பசி மாதம் 1-ந்தேதி வியாழக்கிழமை காலை 5-30 மணிக்கு ஒரு துக்கப் பாடறபூசை ஒப்புக் கொடுக்கப்படும். உறவினர், சிநேகிதர் இதில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் :
மனைவி: மேரி மார்த்தம்மாள் இம்மனுவேல் பெர்ணண்டோ.
மக்கள்: இமாக்குலேற் அனற்ரு இம்மனுவேல் பெர்ணண்டோ, பமிலா பேப்பற்றுவா இம்மனுவேல் பெர்ணண்டோ.

மெயின் வீதி,
[illegible] 109|70

---

● பரீஸ்நகரிலுள்ள புரூசாயிஸ் ஆஸ்பத்திரியிலே 50 வயதுடைய இருதய நோயாளி ஒருவரது மார்பினுள் இருதயத்தை ஒழுங்காக இயக்கும் அணுச்சக்திஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. பரீஸ்நகரிலே இந்த அபூர்வ சத்திரசிகிச்சையை முதன் முதலாக நடத்தியவர் பேராசிரியர் பிவ்னிக்கா என்பவரே. இருதயநோய்க்கு வைத்தியத் துறையில் அணுச்சக்தி பயன்படுத்தப்பட்டது இதுவே முதன்முறையாகும்.

---

புத்தக மதிப்புரை

# "பிள்ளைத்தமிழ்"

ஆக்கியோன் — ஆசிரியர் ச. அமிர்தநாதர்.

பதிப்பகம்—அசோகா அச்சகம், இருகலை.

வெளியிட்டவர் — கலைமகள் மன்றம், நுவரெலியா.

"அழகு," "குலமலர்" எனும் அழகிய நூல்களை இன்பத்தமிழிலே ஆக்கித்தந்து தமிழுலகில் ஏற்கனவே தம்மை அறிமுகஞ் செய்துள்ளவரான ஆசிரியர் ச. அமிர்தநாதர் அவர்கள் செவிக்கு இனிமைதரும் கிள்ளைமொழியிலே மனதுக்கு உற்சாகம்தரும் துள்ளுநடையிலே நவமாகப் படைத்துள்ள "பிள்ளைத்தமிழ்"க்கவிதை மலர்கள் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களுக்குத் தெள்ளமுதம்போலும் தித்திப்பளிக்கும் ஓர் இசை விருந்தாகும். சுவை நலமும், பொருள் நலமும் பொருந்தியனவாய், கதவைத் திறந்து உள்ளத்தை அருட்டித் தெருட்டி உலகியலையும், ஒழுக்கமுதலாம் அறநிலையையும், உயர் அறிவினையும் உறுத்தவனவாய்க் கவிதை வரப்பெற்ற பாரதியாரது கவிதைகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியவர்போல் ஆசிரியர் "பிள்ளைத்தமிழ்" கவிதைகளை ஆக்கியுள்ளார் என்பதைப் படிக்குந்தோறும் அவதானிக்கலாம்.

இயற்கை, வாழ்வு, வாழ்த்து எனும் முப்பிரிவுகளை அடக்கியதான இந்நூலின் ஒவ்வோர்பிரிவும் பல அம்சங்களைக் கொண்டு, ஒவ்வொன்றையும் அர்த்தபுஷ்டியாகக் கவிதைகள் கொண்டு இனிதே எடுத்துக் காட்டுகின்றன.

ஆசிரியர் இன்பத்தமிழன்னைக்கு நவமாகப் புனைந்துள்ள இக் கவிதைமலர்களைத் தமிழ்ச்சிறார்கள் வரவேற்றுப் படித்து இன்புறுவார்களென நம்புகிறோம்.

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

யேசுவின் திவ்விய இருதய இரக்கத்தாலும், பரிசுத்ததேவ தாயார், புனித யூதாததேயு அர்ச். அந்தோனியார், அர்ச் நீற்றம்மா, அர்ச். சின்னத்திரேசம்மா, புதுமைப்பாலன், அர்ச். சூசையப்பர் இவர்கள் மூலம் நான் கேட்ட மன்றாட்டு கிடைத்ததற்கு நன்றி கூறுகிறேன். இன்னும் பரீட்சையில் சித்தியடைய இவர்களை வேண்டுகின்றேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக. ஓர் அடியாள்

* * *

மண்கும்பான் புனித அந்தோனியாரிடம் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைத்ததால் அவருக்கு நன்றி கூறி நேர்த்தியின் படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

அவரின் நாமம் என்றும் புகழப்படுவதாக. ஒரு பக்தன்.

---


அமலமரி தியாகிகளின் (ஓ: எம்: ஐ:) சபையிற் சேர விரும்புவோர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

புனித சூசையப்பர் அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.



## புனிதர்கள் புத்தகங்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| கோடி அற்புதர் அம்மானை | 1-00 | |
| அந்தோனியார் சத்துரு சங்கார மாலை | 2-00 | |
| யூதாததேயு மன்றாட்டுப் பிரார்த்தனை | | 25 |
| நடுத்தீர்வை உலா | | 65 |

ஒவ்வொரு புத்தகத்திற்கும் தபாற்கூலி 10சதம். தபாற்கூலி சேர்த்து அனுப்பாத ஆடர்கள் கவனிக்கப்பட மாட்டாது.

எஸ். எம். இன்னாசிமுத்து உபதேசியார்,
சென் தோமஸ்வீதி, மாதகல், P. O.



### தேவை

காலஞ்சென்ற பண்டிதர் C. S. நவரட்னம் இயற்றிய

HISTORY OF NORTHERN ISLANDS

என்ற புத்தகம், அல்லது இதேசம்பந்தமான வேறே ஏதாவது புத்தகங்கள் தேவைப்படுகின்றன.
பாவித்த புத்தகங்கள் என்றாலும் விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம் :—

MR. JOE E. D. GOMEZ,
P. O. BOX 379,
COLOMBO.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**புரட்டாதி — 1970**

| | | | |
|---|---|---|---|
| 27 | ஞாயிறு | வருடத்தின் 26-ம் ஞாயிறு | [ப] |
| 28 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 29 | செவ்வாய் | மிக்கேல், கபிரி. றப்பி. அ. தூ. | [வெ] |
| 30 | புதன் | புனித ஜெறோம் | [வெ] |

**ஐப்பசி — 1970**

| | | | |
|---|---|---|---|
| 1 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 2 | வெள்ளி | காவற் சம்மனசு | [வெ] |
| 3 | சனி | புனித சின். தெரேசம்மாள் | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# தனித்து யாது செய்யலாம்?

**பரிசுத்ததனத்தை அடைய விரும்புகிறீர்களா? அந்தப் பரிசுத்ததனம் உங்களை மட்டுமல்ல; பிறரையும் மீட்கக்கூடியது. பிறரைப் பாதிக்காமல் ஒருவர் நல்லவராகவோ, தீயவராகவோ ஆவதில்லை. மக்கள் ஒரு குழுவாக இயங்க வேண்டுமென்பதுதான் கிறிஸ்துநாதருடைய திட்டம். நாம் உயர்ந்தால் குழுவின் தரமும் உயரும். நாம் தாழ்ந்தால் குழுவின் தரமும் குறையும். எமது வாழ்வு குழுவை எவ்விதம் பாதித்தது என்பதுதான் நடுத்தீர்வையின்போது எமக்கு வழங்கப்படும் தீர்ப்புக்கு அடிப்படையாக இருக்கும்.**

இத்துணை பெரிய குழுவைப் பாதிக்கக்கூடியதாக நான் தனியே யாது செய்ய முடியும் என்ற கேள்வி எழலாம். அதற்கு விடை, "ஒன்றுமேயில்லை; நீங்கள் தனிமையில் ஒன்றும் செய்ய முடியாது" என்பதுதான். ஆனால், நாம் தனிமையில் இல்லையே. பரிசுத்ததனத்தை நாடும் எவரும் தனிமையில் இருப்பதில்லை. நாம் செய்யும் எந்த அற்ப வேலையும் எமது உடன் உழைப்பாளியான கிறிஸ்துவின் கரங்களிற் சென்றதும் மனித செயலுக்கு அப்பாற்பட்ட ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றுவிடுகிறது. இந்த உண்மையையே புனித இராயப்பர் தமது கிறிஸ்தவர்களுக்குப் போதித்தார். "நீங்களே ஓர் ஆன்மீக இல்லத்தை அமைப்பதற்குரிய உயிருள்ள கற்கள்; நீங்களே தெரிவு செய்யப்பட்ட சனங்களாயும், ஒரு ராஜரீக குருத்துவமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச்சொந்தமான மக்களாயும் இருக்கிறீர்கள்".

"கிறிஸ்துவிலும், அவரோடும், அவர் மூலமாகவும்" என்னும் வார்த்தைகளை நாம் அடிக்கடி கேட்டுப் பழகிவிட்டதால் அவ்வார்த்தைகள் செவியில் ஏறுமலே போய்விடுகின்றன. நாம் கிறிஸ்துவின் உடன் உழைப்பாளிகள். பாப்பரசரோ, மேற்றிராணியாரோ, குருவோ, இல்லறவாசியோ அனைவரும் கிறிஸ்துவுடன் தொடர்பு கொண்டு இருப்பதாற்றான் உழைப்பில் வெற்றிகாண முடிகிறது.

நமது பகைவரை எதிர்த்துப் போராடும் வேலையில் ஒவ்வொருவருக்கும் உரிய பங்கை அவர்களுக்கு அளித்திருக்கிறார். ஒவ்வொரு பொருளையும் அதன் உரிமையாளரான கிறிஸ்துவிடம் கொண்டுவருவது எமது வேலை. அதைக் கிறிஸ்துவின் துணைகொண்டே செய்ய முடியும். நாம் ஒரு மின்குமிழைப் போன்றவர்கள். அதிற் பாயும் மின்சாரம் கிறிஸ்து. எமது ஒளியையல்ல, அவரது ஒளியையே உலகுக்கு அளிக்கிறோம், ஞானஸ்நானத்தின்போது பொறிக்கப்பட்ட கிறிஸ்துவின் முத்திரை எம்மீது விளங்குகின்றது. அவர் நசரேத்தூரில் வளர்ச்சியுற்றதுபோல் நாமும் அறிவிலும், அருளிலும் வளர்ச்சியடைந்து வருகிறோம். உறுதிப்பூசுதல் சமூகத்தில் கிறீஸ்துவுக்குப் பணிபுரிவதற்கு எம்மை ஆயத்தம் செய்தது. தூய ஆவியானவரின் கொடைகளை, விசேஷமாகத் திடம் என்னும் கொடையைப் பெற்றோம். இக்கொடை எலிகளைப் புலிகளாக மாற்றவல்லது.

கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குகொண்ட நாம், அவரோடு ஒன்றித்திருந்தால் அவர் ஆற்றிய கருமங்களையெல்லாம் ஆற்ற வல்லவராயிருப்போம். அவர் உலகை மீட்டுப் பிதாவுக்கு அளித்ததுபோல சகல சிருஷ்டிகளையும் அவரிடம கொண்டுவரக் கூடியவர்களாயிருப்போம்.

வீட்டிலும், அலுவலகத்திலும், பாடசாலையிலும், வீதிகளிலும், சங்கங்களிலும், சபைகளிலும் எம்மை அனுப்பியவருக்காக அறுவடை செய்யக்கூடியவராவோம்.

### ஜப்பானில் பொதுநிலையினரில் தகுதியானேரும் சற்பிரசாதம் கொடுக்கலாம்

ஜப்பான் தேச மேற்றிராணிமார்சங்கத்தின் விண்ணப்பத்துக்கு இணங்கி வத்திக்கான் வேதபோதகவிவகார புனித சபையானது மூன்று வருடங்களுக்கு அப்பகுதி மேற்றிராணிமாருக்கு விசுவாசிகளுக்குச் சற்பிரசாதம் கொடுக்கும் முறையில் பரீட்சைத்தன்மையில் ஓர் இளக்காரம் செய்ய உத்தரவளித்திருக்கிறது. குருமாரின் சேவை கிடைக்கமுடியாதிருக்கும் இடங்களில் திவ்விய சற்பிரசாதத்தை உத்தரவு பெற்ற சந்நியாசிகளும், கன்னியாஸ்திரிகளும் பொதுநிலையினரில் தகுதியான சிலரும் விசுவாசிகளுக்குக் கொடுக்கலாமென்பதே அந்த இளக்காரமாகும்.

யாழ்நகர் மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம், 20-9-70.

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள பாடசாலைகளின் தலைவர்களுக்கு,

### யாழ்ப்பாண மேற்றிராசன
## மறைக்கல்விப் பரீட்சை—1970

மேற்படி மறைக்கல்விப் பரீட்சை இவ்வாண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடாத்தப்படும். இப்பரீட்சை 4-ம், 6-ம், 7-ம், 8-ம் வகுப்புக்களுக்கு நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, உங்கள் பாடசாலையில் மேற்கூறிய வகுப்புகளில் உள்ள கத்தோலிக்க பிள்ளைகளின் எண்ணிக்கையை 30-9-70-க்கு முன் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இம்மாத முடிவு தொடக்கம் மாதிரி வினக்கள் பாதுகாவலனில் தொடர்ந்து வெளியிடப்படும். தங்களது ஒத்துழைப்பை வினயமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஜி. ரி. பாலசுந்தரம், ஒ. எம். ஐ.,
மறைக்கல்விக் குழுத்தலைவர்.

### புதுச் செட்டித் தெரு மாதா கோவில் 150 வருட நிறைவு விழா

கொழும்பு, கொட்டாஞ்சேனை, புதுச் செட்டித்தெருவில் சென்ற 150 வருட காலமாக கொழும்புச் செட்டிமக்களின் பிரதான கோவிலாக உள்ள மாதா கோவிலில் சென்ற வாரம், அக் கோவிலின் 150 வருட நிறைவு சேவையைக் கொண்டாட பல நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். கொழும்பு துணை ஆயர் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளார் அன்று பின்னேரம் அக் கோவில் அண்மையில் வரவேற்கப்பட்டு கோவிலுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கே அவருடன் ஒன்றுசேர்ந்து அப் பிரிவுக்குச் சேர்ந்த பல குருமார் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். கோமிஸ் அடிகளார் செய்த பிரசங்கத்தில் கத்தோலிக்க செட்டிமக்களின் சமய வைராக்கியத்தைப் புகழ்ந்து பேசி, மேலும் மேலும் அது ஓங்கி வளரப் பிரார்த்தித்துக்கொண்டார்.

### மலாவிய குருமாருக்கு ஒரு பென்சன் திட்டம்

ஆபிரிக்க கண்டத்தின் மலாவி தேசத்தில் அத்தேச மேற்றிராணிமார் சங்கம் அப்பிரிவில் வேலை செய்து வரும் குருமார் யாவருக்கும் ஒரு பென்ஷன் திட்டத்தைத் தயாரித்திருக்கின்றது. குருமார் 65 வயதானவுடன் ஒரு சிறிய பென்ஷன் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவராவர். இத் திட்டம் மூன்று வருடங்களுக்குப் பின்புதான் நடைமுறையிலிருக்குமெனவும், அதற்குவேண்டிய பொறுப்புகளை மேற்றிராணிமார் சங்கம் ஆயத்தம் செய்துவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### "புது அரசியல்திட்ட அமைப்பை தேவன் வழிநடத்த வேண்டும்"

"எமது நாட்டின் அரசியல் திட்டம் எமது நாட்டின் வருங்கால தன்மையையும் எமது சமூகத்தின் நிலைமையையும் பெரிதும் பாதிக்குமாதலால் இந் நாட்டுக் கிறிஸ்தவர்கள் யாவரும் ஒருமித்து புதிய அரசியல் திட்ட அமைப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும் யாவரையும் தேவன் வழிநடத்தவேண்டுமென இரந்து மன்றுடுவோமாக" என கொழும்பு அங்கிளிக்கன் கிறிஸ்தவசபை மேற்றிராணியாராகிய ஹறல்டி சொயிசா அடிகளார் மறு கிறிஸ்தவ சபையினரின் சார்பாகக் கேட்டிருக்கின்றார்.

### நிரீஸ்வரவாதிகளுடன் எவ்வாறு தொடர்புகொள்வது

வேதவல்லுனர் 60 பேரான யேசுசபைக் குருமார் சென்றவாரம் ஆங்கில நாட்டில் றெயினகில் என்னும் இடத்தில் ஒன்றுகூடி கத்தோலிக்கர் சித்தியுடன் எவ்வாறு நிரீஸ்வர வாதிகளுடன் தொடர்பு கொள்ளலாமென ஆராய்ந்துகொண்டனர். இக் கூட்டத்தின் முயற்சிக்கு வத்திக்கானின் ஆதரவு அமைந்திருந்தது என்பதை அதற்கு அங்கிருந்து அனுப்பப்பட்ட உயர் அதிகாரிகள் சான்றுபகர்ந்தனர். அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பிய நாட்டிலிருந்தும் ஆலோசகர்கள் வந்திருந்தனர் ஒருகாலம் நிரீஸ்வரவாதிகளாயிருந்தவர்கள் பிற்காலத்திலே தேவனை ஒப்புக்கொண்ட பல திருஷ்டாந்தங்கள் இருப்பதால் இப் பிரிவினருடன் வேண்டாவெறுப்பாக நடந்துகொள்வது பிழையாகுமெனும் அபிப்பிராயம் கூட்டத்தில் நிலவியது.

### கருதினல் மறெல்லாவின் தைவான்தீவு விஜயம்

75 வருடம் நிறைவு பெற்றவராகிய கருதினல் மறெல்லா அடிகளார் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுடன் தொடர்பு கொள்ளும் வத்திக்கான் காரியாலய அதிபர், அவர் அண்மையில் யப்பான் தேசம் சென்றிருந்தார். அந்நாட்டில் ஓசாக்கா நகரில் நடந்த எக்ஸ்போ 70இல் பாப்பரசரின் விசேஷ தூதுவராகப் பங்குபெற அங்கு அனுப்பப்பட்டிருநத்தார். யப்பான் தேசத்திலிருக்கும போது தேசிய சினவின் அழைப்பின்பேரில் தைவான் தீவுக்கு விஜயம் செய்தார். தைவான் தீவிலுள்ள கத்தோலிக்க மக்கள் மறெல்லா அடிகளாருக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கினறனர். 1939-ம் ஆணடில் மறில்லா அடிகளார் அப்பகுதியில் பாப்பரசரின் தூதுவராகக் கடமையாற்றிய நாட்களில் சுதேச மக்களின் தேசிய கொண்டாட்டங்களில் கத்தோலிக்கர் சேர்ந்துகொள்ள அனுமதி பெற்றுக்கொடுத்ததே இதற்குக் காரணமாகும்.

● அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பிரயாணிகளின் விமானங்கள் திசை திருப்பிக் கடத்திச்செல்லப் படுவதைத் தடுக்குமுகமாக அமெரிக்கா தனது பிரயாண விமானங்களில் ஆயுதம் தாங்கிய 2,500 காவலர்களை அமர்த்தியுள்ளது. இந்த நியமனத்தையிட்டு அமெரிக்கா வருடம் ஒன்றுக்கு 2 கோடியே 20 லட்சம் டலர் செலவுசெய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆடு புரட்டாதிமீ 26ஆம்உ சனிக்கிழமை அச்[illegible] வெளியிடப்பட்டது. [illegible] "கத்தோலிக்க பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தந்தி: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org